# திருச்சிலுவைப்பாதை –1



## முன்னுரை:

சிலுவைப் பாதை! இது இயேசு ஆண்டவரின் இலட்சியப்பாதை. ஒரு வெற்றிப்பாதை. வீரமுழக்கம் செய்யும் பாதை. அழுது புலம்பிக் கொண்டிருக்கும் இதயங்களுக்கு, காயம்பட்டுப் புரையோடிக் கொண்டிருக்கும் மனங்களுக்கு, உறவில் ஊனத்தை ஏற்படுத்தி, விரிசலை உண்டாக்கி, அதில் போலித்தனமான இன்பம் அடைகின்ற மனித மரங்கொத்திகள் காட்டும் பாதை எப்படிச் சிலுவைப்பாதையாகும். எங்கு பார்த்தாலும் மனிதர்களாகிய நாம் வேதனையின் உச்சிக்குச் செல்கின்ற அவல நிலை. நம்முடைய கையாலாகாத்தனத்தின் எதிரொலியை இன்று எல்லாத் திசைகளிலும் கேட்கின்றோம். யாரையோ நோக்குகின்றோம். எதையோ எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு வெந்து நொந்து புலம்புகின்ற நம்முடைய ஆன்மாக்களுக்கு என்ன பதில்? ஏன் இந்த நிலை? என்ன நேர்ந்தது இச்சமுதாயத்திற்கு? என்ற கேள்விகள் நம் இதயங்களில் உருவான காயங்களின் பதிவுகளாக, பெருங் கவலைகளாக நம்முன் வளர்ந்து நிற்கின்றன.

மனிதர்கள் இவ்வுலகில் சந்திக்கும் பிரச்சினைகளுக்கெல்லாம் நாம் பாவம் செய்துவிட்ட சமுதாயம் என்றோ, நாம் கடவுளால்

நிராகரிக்கப்பட்ட மக்கள் என்றோ, நம் தலைவர்கள் தவறிவிட்டார்கள் என்றோ காரணங்கள் கற்பித்துக் கொண்டு உலகின் கடைசி நாள் இதோ வந்துவிட்டது, இத்தோடு எல்லாப் பிரச்சினைகளும் முடிவுக்கு வந்துவிடும் என்று பத்தாம் பசலித்தனமான விளக்கங்களைக் கூறித் திரிவது நம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்ள உதவுமே தவிர நம் வாழ்விற்கு வழிகாட்ட ஒருபோதும் உதவப்போவதில்லை. உலகில் எப்படி வாழ்வது? பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது? எப்படிச் சரியான முடிவுகள் எடுப்பது? என்பன போன்ற வினாக்களுக்கு விளக்கங்களெல்லாம் ஏட்டுக் கல்வி கற்றுக்கொடுக்கும் பள்ளிகளில் நமக்குப் போதிக்கப்படுவதில்லை. இவற்றையெல்லாம் நாமே உலகம் என்கின்ற அனுபவப் பள்ளியில் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லித்தந்த நம் இயேசு ஆண்டவரின் அனுபவப்பகிர்வுதான் சிலுவைப்பாதை.

நம் பாவங்கள் தந்த பாரச்சிலுவை இயேசுவின் பாதங்களை அழுத்த, பாறைகளில் அவர் பதித்த காலடித்தடங்கள் பாதச்சுவடுகளாகப் பதிந்து பாதையாகப் பளிச்சிடுகின்றன. அநீதியை அழித்து, அன்பை விதைக்க இயேசு நடந்து சென்ற இந்தப் பாதைதான் நாம் நடக்க வேண்டிய பாதை. மனிதரின் பாவங்களைக் கழுவ மனித உருவெடுத்த இயேசு இம்மண்ணில் வாழ்ந்தபோது அனைவருக்கும் அன்பு மொழி சொன்னார். அன்புத் தொண்டு புரிந்தார். அவர் இவ்வுலகிற்குக் காட்டிய அன்பே அவர் செய்த பாவம் எனக் கருதிய பாருலகம், அன்றே பாரச்சிலுவையை அவருக்குப் பரிசாக்கியது. இன்றும் அன்பு செய்பவர்களுக்கும் அன்புத் தொண்டு ஆற்றுகின்றவர்களுக்கும் இந்த உலகம் தருகின்ற பரிசு சிலுவைதானே. மூன்று ஆணிகளுக்கிடையே தொங்கிய இயேசுவின் அன்பு வாழ்வை நமதாக்கத் திருஅவைத் தாய் இத்தவக்காலத்தில் அழைப்பு விடுக்கின்றார். இன்று நம் அரசியல் தலைவர்கள் நடக்கும் பாதை ரோஜா மலர்ப்பாதை. நம் ஆன்மீகத் தலைவர்கள் கற்பிக்கும் பாதை மல்லிகை மலர்ப்படுக்கை விரித்த பாதை. நம் ஆண்டவர் இயேசு காட்டும் பாதை மட்டுமே உண்மையான வாழ்வுப்பாதை. அதுதான் சிலுவைப்பாதை. மனித உள்ளங்களில் பிறரன்புத் தீயை மூட்ட வந்த நீதியின் சூரியனாம் நம் இயேசுவின் வாழ்வை நாம் வாழ்ந்து, அவராக மாறிட அருள் வேண்டி இப்பயணத்தைத் தொடர்வோம்.

## முதல் நிலை

## அநீதித் தீர்ப்பு அரங்கேறுகின்றது

பாடல்:

வழிநடத்துபவர்: இயேசு பாடுபட்ட முதல் நிலை

முதல்வர்: அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இறைமக்கள்: ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

வழிநடத்துபவர்: சென்ற இடங்களிலெல்லாம் நன்மையே செய்த நாசரேத்தூர் நாயகனுக்குத் தீர்ப்பு. “இவன் மக்களிடையே குழப்பம் உண்டாக்குகின்றான். செசாருக்கு வரி செலுத்தக்கூடாது என்கின்றான். நானே மெசியா, அரசன் என்று சொல்லிக் கொள்கின்றான். இப்படியெல்லாம் இவன் செய்யக் கண்டோம்”, என்று குற்றப்பத்திரிக்கை வாசித்து, அநீதியை அரங்கேற்றம் செய்தது யூதர் கூட்டம். இப்படிப்பட்ட அநீதியான தீர்ப்புகள் அன்று மட்டுமா? இன்றும் தொடர்கின்றன.

இயேசு பேசுகின்றார்: என் அன்பு மகனே! மகளே! உனக்குப் பிடிக்காதவர்கள் தம் அன்பைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து வாழ்வதை நீ கண்டு பொறுத்துக்கொள்ள முடியாமல் அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவர்கள் தீயவர்கள் என்று முத்திரை குத்தி உலகிற்கு விளம்பரப்படுத்துகின்றாயே! அப்பொழுது நீ எனக்கே தீர்ப்பளிக்கின்றாய்.

உனது மனசாட்சியை மழுங்கடித்து உனக்கு நீயே நேர்மையாளன் என்று பட்டம் சூட்டிக்கொண்டு, உனது மிகப் பெரிய குற்றங்களை மறைப்பதற்காக, உன்னோடு வாழ்கின்றவர்களின் சிறுசிறு தவறுகளை எல்லாம் ஊரெங்கும் விளம்பரப்படுத்துகின்றாயே! அப்பொழுது நீ எனக்கே தீர்ப்பளிக்கின்றாய்.

நீ விரும்பியவர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு நீ விரும்பாதவர்களை வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக்குகின்றாயே! அப்பொழுது நீ எனக்கே தீர்ப்பளிக்கின்றாய்.

பெயர், புகழ், பதவி உடையோரிடமும் பணக்காரர்களிடமும் பற்களைக் காட்டிக் கொண்டு, அதே வேளையில் ஏழைகளை உழைக்க மனமில்லாதவர்கள் என்று இழித்துரைத்து அவமானப்படுத்துகின்றாயே! அப்பொழுது நீ எனக்கே தீர்ப்பளிக்கின்றாய்.

அன்று பிலாத்து எனக்கு ஒரு முறைதான் அநீதியாகத் தீர்ப்பளித்தான். ஆனால் இன்று நீயோ ஒரு நாளைக்கு ஓராயிரம் பேருக்கு அநீதியாகத் தீர்ப்பளிக்கின்றாய். நீதி, நேர்மையைக் குழி தோண்டிப் புதைக்கின்றாய். அப்படி நீ செய்யும்போது உன்னில் இருப்பதும் ஒரு பிலாத்துதானே. எப்போது இந்தப் போக்கிலிருந்து திருந்தப் போகின்றாய். தீர்ப்பிடாதே! தீர்ப்புக்கு உள்ளாகமாட்டாய்!

**மன்றாட்டு:** "தீர்ப்பிடாதீர்கள்! தீர்ப்புக்குள்ளாகமாட்டீர்கள்!" என்று சொன்ன இயேசுவே! எனது வாழ்வில், பிறரின் பொய்யுரைகளை நம்பி உண்மையை உணராது பிறருக்கு அநீதியான தீர்ப்பு வழங்கி அவர்களின் உள்ளங்களை வேதனைப்படுத்திய நேரங்களை எண்ணி மனம் வருந்துகின்றேன். என்னை மன்னியும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## இரண்டாம் நிலை

## வெற்றியின் சின்னம் வீரரின் தோளில்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட இரண்டாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** நன்மை செய்த நாயகனுக்குக் கிடைக்கும் பரிசு சிலுவை. “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என்றவருக்கு யூதர்கள் வழங்கியது பாரச் சிலுவை. அவமானத்தின் சின்னத்தை அரவணைக்கின்றார் இயேசு.

**இயேசு பேசுகின்றார்:** என் அன்பு மகனே! மகளே! பணத்திற்காகவும் பொருளுக்காகவும் பதவிக்காகவும் சுற்றத்தைத் துறந்து, உறவுகளை மறந்து, உடன்பிறந்தோரையும் உன்னுடன் வாழ்வோரையும் துச்சமென நினைக்கின்றாயே! அப்போது நீ என் தோள் மேல் சிலுவையைச் சுமத்துகின்றாய்.

உன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களை முதுமையில் ஏற்க மறுத்து முதியோர் இல்லங்களுக்கு அனுப்புகின்றாயே! அப்போது நீ என் தோள் மேல் சிலுவையைச் சுமத்துகின்றாய்.

உன் சாதியின் பெயரில் சங்கம் வைத்து, வீதிக்கொரு விழாமேடை அமைத்து, உன்னை விளம்பரப்படுத்திக் கொள்கின்றாயே! அப்போது நீ என் தோள் மேல் சிலுவையைச் சுமத்துகின்றாய்.

உன்னிடம் உழைக்கின்ற ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி, அவர்களுக்கு உண்மையான கூலியைக் கொடுக்க மறுக்கின்றாயே! அப்போது நீ என் தோள் மேல் சிலுவையைச் சுமத்துகின்றாய்.

உன் பொறுப்பற்ற குடும்ப வாழ்வால், குடிவெறியால், நீ உன் குடும்பத்தைச் சீர்குலைப்பது கண்டு, வாழத்துடிக்கும் அழகுமிகு மலர்களுக்குச் சமமான உன் பிள்ளைகள் வாடி வதங்கி நிற்கின்றபோது, நீ என் தோள் மேல் சிலுவையைச் சுமத்துகின்றாய்.

உன்னுடைய கீழ்த்தரமான சொற்களால், செயல்களால், குடும்பங்களில், ஊர்களில், குழப்பத்தையும் பதட்டத்தையும் ஏற்படுத்துகின்றபோது, நீ என் தோள் மேல் சிலுவையைச் சுமத்துகின்றாய்.

நீ வாழும் சமூகத்தில் உன்னுடன் வாழ்வோரை உன்னுடைய இரக்கமற்ற செயல்களினால் உள்ளம் குமுறிக் கதறவும் கண்ணீர் சிந்தவும் வைத்துவிட்டு, என்னால் 40 நாட்கள் உண்ணா நோன்பு இருக்கமுடியவில்லையே என்று போலியாகக் கூப்பாடு போடுகின்றாயே? உன்னால் நொந்து, வெந்து வாழும் சகோதர சகோதரிகளின் மனக்காயங்களுக்கு மருந்திடுவதின் மூலம் எனது சிலுவைச் சுமையைக் குறைப்பாயா?

**மன்றாட்டு:** இயேசுவே! எனது தன்னலத்தாலும் ஆணவத்தாலும் அகந்தையாலும் பிறர் மேல் சுமைகளைச் சுமத்திவிட்டு, அவற்றைக் குறைக்க எனது சுண்டுவிரலைக்கூட அசைக்க மறுக்கின்றேன். பிறர் மேல் சுமை சுமத்துவதற்குப் பதிலாக பிறருக்குச் சுமை தாங்கியாக வாழ எனக்கு உமது அருள் தாரும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## மூன்றாம் நிலை

## இயேசு முதன்முறையாக மண்ணை முத்தமிடுகின்றார்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட மூன்றாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** விண்ணையும் மண்ணையும் படைத்தவர், மனிதனை மீட்க வந்தவர், தரையிலே வீழ்கின்றார். விண்ணிற்கும் மண்ணிற்கும் கடவுளுக்கும் மனிதருக்கும் உறவுப்பாலம் அமைக்க வந்தவர் மண்ணிலே சாய்கின்றார். சிலுவையின் சுமை அழுத்தியது மட்டும் அல்ல; சோர்வு, களைப்பு இவற்றால் ஆட்கொள்ளப்பட்டு நிலத்திலே வீழ்கின்றார்.

**இயேசு பேசுகின்றார்:** என் அன்பு மகனே! மகளே! என் வேதனை கண்டு துயர் அடையும் நீ உனக்கு வெகு அருகில் விழுந்து கிடப்போரைக் கண் திறந்து பார்.

வறுமையால், நோயால் அடிமேல் அடி வாங்கி எழ முடியாமல் கிடக்கும் குடும்பங்களில் உள்ள சகோதர சகோதரிகளைக் காக்க என்றாவது நீ எழுந்து சென்றதுண்டா?

பாவத்தில் வீழ்ந்தோரைத் தூக்கி நிறுத்துவது நான். ஆனால் நீயோ உலக அதிகாரமே உன் கையில் உள்ளது என நினைத்துக் கொண்டு மற்ற எல்லாரையும் பாவிகளென்று பட்டம் சூட்டி, அவமானப்படுத்திச் சமூகத்தில் இருந்து அவர்களை ஒதுக்கி வைக்கத் துடிக்கின்றாயே! பணம், பட்டம், பதவி, புகழ், பெருமை என்னும் சாக்கடையில் மூழ்கி முத்தெடுக்க நினைக்கின்றாயே! எப்பொழுது நீ இப்படுகுழியிலிருந்து மீண்டு எழப்போகின்றாய்?

உன் போதையால், உன் குடிவெறியால், உன் குடும்பம் அகல பாதாளத்தில் விழுந்து கிடக்கின்றதே, உன் ஊதாரித்தனத்தால் உன்னுடைய வீடே விலை போகின்றதே, உன் குடும்பம் வீதிக்கு வந்து நிற்கின்றதே, எப்பொழுது நீ மீண்டெழுந்து இவை எல்லாவற்றையும் தூக்கி நிலை நிறுத்தப்போகின்றாய்?

நீ பணத்திற்காகப் பாவ வலையில் அகப்பட்டுக் கொள்ளும்போது, நான் கீழே விழுகின்றேன்.

உடல் நோயால், மனவேதனையால் உள்ளம் நொந்து வருந்துவோரை நீ மேலும் புண்படுத்தும்போது, அவர்கள் மனங்களைக் காயப்படுத்தும்போது நான் கீழே விழுகின்றேன்.

உன் சுடுசொற்களால், கனிவற்ற பார்வையால், கொடுமையான செயல்களால் உன் சகோதர சகோதரிகளை மனம் புண்படச் செய்யும்போது நான் கீழே விழுகின்றேன்.

உன்னால் வாழ்விழந்து, வழியிழந்து வீழ்ந்து கிடப்பவர்களை உனது மன மாற்றத்தின் மூலம் தூக்கி நிறுத்துவதின் வழியாக மண்ணில் விழுந்து கிடக்கும் நான் மீண்டும் எழத் துணை புரிவாயா?

**மன்றாட்டு:** இயேசுவே! எனது ஒவ்வொரு பாவச் செயலும் உம்மை அழுத்தி, புழுதியிலே புரளச் செய்துள்ளது. என்னைச் சூழ்ந்திருப்பவர்களை நசுக்கி விழுத்தாட்டுகின்ற தீய குணத்தினின்று நான் விடுபட்டு, விழுந்துகிடக்கின்றவர்களைத் தூக்கி நிலைநிறுத்தும் கொழுகொம்பாக வாழ அருள்புரியும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## நான்காம் நிலை

## தாயும் சேயும் சந்தித்தல்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட நான்காம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** பார்வைகள் பாசத்தைப் பரிமாறிக் கொள்கின்றன. தன் தாயின் பார்வை தனக்கு ஆற்றல் தரும் என்ற ஏக்கத்தோடு இயேசு தம் தாயை உற்று நோக்குகின்றார். தான் பெற்று, தாலாட்டி, சீராட்டி வளர்த்த தன் செல்ல மகனுக்கா இந்த அவலநிலை என்று ஆதங்கத்தோடு நோக்குகின்றார் அன்னை மரியா. பாசமுள்ள இதயங்கள் இணையும்போது சுமைகள் கூட எளிதாகின்றன. தாயின் வலிமையை மிஞ்சியது இத்தரணியில் வேறில்லை என்பதை இயேசு உணர்கின்றார்.

**இயேசு பேசுகின்றார்:** என் அன்பு மகனே! மகளே! இதோ என் பாசமிகு அன்னையைப் பார். முகம் சோர்ந்து, நடை தளர்ந்து என்முன் அவர் நிற்பதைப் பார். ஆனால் இவ்வளவு துயரத்தின் மத்தியிலும் அவரது கண்களில் நம்பிக்கை ஒளி எனக்குத் தெரிகின்றது. என்னை அவர் உற்சாகத்படுத்தி வழிஅனுப்ப விரும்புவது எனக்குப் புரிகின்றது.

அப்படியென்றால் அவர் முகத்தில் ஏன் சோர்வு? அவர் நடையில் ஏன் தளர்ச்சி? அவரது மனத்தில் ஏன் வருத்தம்? அவர் உடலில் ஏன் வலுவின்மை? உனக்கு இன்னுமா புரியவில்லை.

என் தாயின் இரக்கத்தின் அடையாளமாக இருக்கின்ற பெண்ணின் இதயத்தை உன் அரக்கத்தனமான வார்த்தைகளால் நீ காயப்படுத்துகின்றாயே! அதனால்தான் என் தாயின் முகத்திலும் இத்தகைய சோர்வு.

உன்னைப் பெற்று வளர்த்துச் சான்றோனாக்கிய உன் தாயை அவர் முதிர்ந்த வயதினர் என்பதற்காகச் சுமையென நினைக்கின்றாயே! அதனால்தான் என் தாயின் நடையிலும் தளர்வு.

பெண்களைப் போதைப் பொருளாக, விலைபொருளாகக் கருதி நவீன துச்சாதனாக மாறுகின்றாயே! அதனால்தான் என் தாயின் மனதிலும் வருத்தம்.

பெண்ணே! பெண்ணினத்திற்கு வலுவூட்டுவதற்குப் பதிலாக பெண்களைக் குறைகூறிப் பெண்ணினத்திற்கு எதிராகவே நீ போர் தொடுக்க எண்ணுகின்றாயே! அதனால்தான் என் தாயின் உடலிலும் வலுவின்மை.

அன்று நான் பிறந்த நாற்பதாம் நாள் எருசலேம் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டபோது என் தாயைப் பார்த்துச் சிமியோன் என்னும் இறைவாக்கினர், “உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” என்று இறைவாக்குரைத்தார். இன்றோ நீ அளிக்கும் பரிசுகளாக ஓராயிரம் வாள்களும் ஈட்டிகளும் என் தாயின் இதயத்தைக் குத்தித் துளைக்கின்றன. என் அன்பு அன்னையின் பாசப்பார்வை உன்னைப் பக்குவப்படுத்தாதா?

**மன்றாட்டு:** இயேசுவே! உன் விழியின் பார்வையில், உன் தாயின் விழியின் ஒளியில், என் உள்ளம் கசிந்தது, என் இதயம் விழித்தது. பெண்ணினத்தின் கண்ணீருக்குக் காரணமான என்னை மன்னித்து, அவர்களை மதித்து, அன்பு செய்யும் மனம் தாரும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## அய்ந்தாம் நிலை

## சுமையை எளிதாக்க சுமைதாங்கியாய் ஒரு கரம்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட அய்ந்தாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** யார் இந்தச் சீமோன்? எல்லோரும் பார்த்து விட்டுத் தத்தம் வழியில் செல்லும்போது, இந்தச் சீமோன் மட்டும் இயேசுவுக்குத் தோள் கொடுக்க முன்வருகின்றார். ஏன்? கட்டாயத்தினாலா? அல்லது கனிந்த உள்ளத்தினாலா? தள்ளாடித் தள்ளாடிச் செல்லும் இயேசுவைத் தாங்க அவரைத் தூண்டியது எது? அதுதான் அன்பு. பரிவுள்ள இதயத்திலிருந்து புறப்படும் அன்பு உதவி செய்ய முன் வருகின்றது.

**இயேசு பேசுகின்றார்:** என் அன்பு மகனே! மகளே! நீ வாழும் சமூகத்தைச் சற்றுக் கண்ணோக்கிப் பார். எத்தனை ஆயிரம் பேருக்கு உன் உதவிக்கரம் தேவைப்படுகின்றது. மற்றவரின் துன்ப துயர நேரங்களில் பங்கெடுக்கும்போதுதான் உண்மையான நட்பு, அன்பு வெளிப்படும். நீ அன்றாடம் நடத்தும் வாழ்க்கைப் பயணத்தில் சோகத்துக்கே சொந்தக்காரர்களான எத்தனை பேரைச் சந்திக்கின்றாய். அவர்களின் துயர் துடைக்க என்றாவது முனைந்திருக்கின்றாயா?

இதயத்தில் காயப்பட்டு அழுது புலம்பிக் கொண்டிருக்கும் உன்னோடு வாழும் சகோதர, சகோதரிகளின் இதயத்துக்கு என்றாவது உன் கனிவான பார்வையால், சொல்லால், செயலால், மருந்திட்டு இருக்கின்றாயா?

இறைவன் உன்னை ஒரு சுமைதாங்கியாக வாழவே அழைத்திருக்கிறார்; மாறாக, பிறருக்குச் சுமையாக வாழ அல்ல. மற்றவர்களின் துன்பச்சுமையை, மனச்சுமையைத் தாங்குவதில் ஏற்படும் மகிழ்ச்சியை அளவிடுவது எளிதல்ல.

நீ நடந்து செல்லும் வீதிகளில் எத்தனை எத்தனை மனிதர்கள் பசியும் பட்டினியுமாக வாடிய நிலையில் கிடக்கின்றார்கள். அவர்களுக்கு உன் உதவிக்கரம் எப்போது நீளப் போகின்றது?

வறுமையின் கொடுமையால் வாழையடி வாழையாக அடிமைப்பட்டுக் கிடக்கும் உன் அடுத்திருப்பவர்க்கு உன் உரிமைக்கரம் எப்போது நீளப் போகின்றது?

வாழ வழி அறியாமல் தவிக்கும் அபலைக்கும் நோயின் பிடியில் சிக்கித் தவிக்கும் ஏழைக்கும் உன் அன்புகரம் எப்போது நீளப் போகின்றது? இத்தகைய இயேசுக்களின் பாரத்தைக் குறைக்கும் சீமோனாக நீ எப்பொழுது மாறப் போகின்றாய்?

**மன்றாட்டு:** இயேசுவே! உமது நீண்ட கரங்கள் எனது கரங்களாகி, நான் காணுகின்ற அனைவரையும் அரவணைத்து அன்பின் நிறைவோடு, உதவி செய்யும் உயர்ந்த உள்ளத்தை எனக்குத் தந்தருளும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## ஆறாம் நிலை

## வீரமங்கை வெரோணிக்காவின் தீரச் செயல்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட ஆறாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த வெரோணிக்கா என்னும் பெண், வீராங்கனையாக உருமாறுகின்றார். படைவீரர்களைக் கண்டு அவர் அஞ்சி நடுங்கவில்லை, பயப்படவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர் பெண்ணடிமைத்தனத்தைப் புதைகுழியில்

தள்ளிய புரட்சியை முன்னெடுத்திருக்கிறார். யூதச்சமயத் தலைவர்கள் இயேசுவின் மீது கொலைக்குற்றம் சாட்டி, கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்கின்றனர். அந்த நேரத்தில், தான் அங்கு சென்றால் அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று அவர் எண்ணி ஒதுங்கவில்லை; மாறாக, இரக்கம் அவரைப் பற்றிப்பிடிக்க, மனிதநேயம் அவர் மனதை உரசிப்பார்க்க, தன்னைச் சுற்றி எழுப்பப்பட்ட வேலியை உடைத்துக்கொண்டு விரைகின்றார் வெரோணிக்கா. பெண்ணினப் புரட்சிக்கு இதன்மூலம் வித்திடுகின்றார்.

**இயேசு சொல்கின்றார்:** என் அன்பு மகனே! மகளே! எருசலேம் நகர ஆண்களும் பெண்களும் என் அவல நிலை கண்டு கண் மூடி, வாய் பொத்தி மௌனிகளாக இருந்தபோது வெரோணிக்கா மட்டும் துணிச்சலோடு என் முன்னால் வந்து நின்றது என்னை மெய் சிலிர்க்க வைக்கின்றது. எனது வேதனையையும் வலியையும் அவரால் உணர முடிந்தது. எனது உணர்வுகளையும் ஏக்கங்களையும் அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. மனிதநேயத்தின் மறு வடிவமாகின்றார் வெரோணிக்கா.

எப்பொழுது நீ உனக்கு அடுத்திருப்பவரின் உணர்வுகளைப் புரிந்து, அவரை மதித்து ஏற்றுக் கொள்கின்றாயோ, அப்பொழுது நீயும் ஒரு வெரோணிக்காவாக மாறுகின்றாய்.

எப்பொழுது நீ துன்புறும் மனிதரின் அழுகுரல் கேட்டு அவர்களது கண்ணீரைத் துடைக்க உன் கரம் நீட்ட முயலுகின்றாயோ, அப்பொழுது நீயும் ஒரு வெரோணிக்காவாக மாறுகின்றாய்.

எப்பொழுது நீ உன்னுடன் வாழுகின்றவர்களின் உள் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, புண்பட்ட அவர்களின் உணர்வுகளுக்கும் உள்ளங்களுக்கும் மருந்திட முயல்கின்றாயோ அப்பொழுது நீயும் ஒரு வெரோணிக்காவாக மாறுகின்றாய்.

பெற்ற பிள்ளைகளால், உற்றார் உறவினரால், கைவிடப்பட்ட நிலையில் காப்பாற்றுவார் இன்றிக் கவலையில் உழல்கின்ற முதியவர்களை எப்பொழுது நீ ஆதரித்து, அரவணைத்துப் பாதுகாக்கின்றாயோ அப்பொழுது நீயும் ஒரு வெரோணிக்காவாக மாறுகின்றாய்.

சமூதாயத்தில் மனிதர்களால் புறக்கணிக்கப்பட்டு, குப்பைத்தொட்டிகளில் குப்பைகளாக வீசி எறியப்பட்ட அனாதைகள், ஆதரவற்றவர்கள் முதலானோரின் புண்களை எல்லாம் கழுவித் துடைத்து மருந்திட்டுக் கட்டிய அன்னை தெரசாவைப் போல் நீ மாறினால், நீ வெரோணிக்காதான்.

மருத்துவமனைகளில், வீதிகளில், குப்பைத் தொட்டிகளில், சாக்கடைகளில் வீசியெறியப்படுகின்ற குழந்தைகளுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்போது நீ வீரமுள்ள வெரோணிக்காதான்

வீரமுள்ள, துணிச்சலுள்ள வெரோணிக்காவாக என்று நீ செயல்படப் போகின்றாய்?

**மன்றாட்டு:** இயேசுவே! ஊராரின் பழிச்சொல், நண்பர்களின் ஏளனப் பேச்சு, உற்றாரின் உறுமல் இவற்றிற்கெல்லாம் பயந்து, நடுங்கி உம் அன்பு முகத்தை, அழுக்கடைந்த ஏழைகளிடம் காணத் தவறியுள்ளேன். மன்னியும், மனம் திருந்தி வாழ அருள்புரியும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறையாக மண்ணை முத்தமிடுகின்றார்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட ஏழாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** வல்லமை மிகுந்த இயேசு, தள்ளாடித் தரையில் இரண்டாம் முறையாக விழுந்து கிடப்பதன் காரணம்? அவரது வலுக்குறைவு மட்டுந்தானா? அவரது இயலாமை மட்டுந்தானா? இல்லை, இல்லை. “தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்” என்றார் வள்ளுவப் பெருந்தகை. நாமோ தீய, இழிவான செயல்கள்

என்று தெரிந்தும் மீண்டும் மீண்டும் அதே செயல்களைச் செய்வதில் இன்பம் காண்கின்றோம். நமது தீய செயல்கள்தான் இயேசுவை இரண்டாம் முறையாக மண்ணிலே விழ்த்தி இருக்கின்றன.

**இயேசு பேசுகின்றார்:** என் அன்பு மகனே! மகளே! எப்பொழுதெல்லாம் நான் கீழே விழுகின்றேன் என்று உனக்குத் தெரியுமா? உயர் பதவியில் நீ அமர்ந்து கொண்டு, உனக்குக்கீழ் பணிபுரிபவர்களை மனிதத்தன்மை இன்றி இழிவாக நடத்தி, இறுமாப்போடு அலைகின்றாயே! அப்போது நான் கீழே விழுகின்றேன்.

உனக்கு நான் கொடையாகக் கொடுத்த கனிவுள்ள இதயத்தைக் கல்லாக்கி, உன்னோடு வாழ்கின்றவர்களின் நற்பெயரைக் கெடுக்க வழிதேடுவது மட்டுமல்லாமல், அவர்களை அடியோடு விழ்த்தக் குழிதோண்டி, அதில் போலி இன்பம் அடைகின்றாயே! அப்போது நான் கீழே விழுகின்றேன்.

பொறுப்புள்ள கணவனாக, மனைவியாக வாழ்வதற்கு மாறாக, பொறுப்பில்லாமல் வாழ்ந்து, பிள்ளைகளுக்குத் தவறான மாதிரியாக நீ வாழுகின்றாயே! அப்போது நான் கீழே விழுகின்றேன்.

பணத்துக்கும் புகழுக்கும் பதவிக்கும் பட்டத்துக்கும் பெருமைக்கும் நீ அடிபணிந்து கிடக்கின்றாயே! அப்போது நான் கீழே விழுகின்றேன்.

இவை அனைத்திலுமிருந்து நீ விரைந்து எழவேண்டும் என்பதற்காக நான் இரண்டாம் முறையாகக் கீழே விழுந்து மீண்டும் எழுந்து நடக்கின்றேன். என் பாதச் சுவடுகள் பின் தொடர்வாயா?

**மன்றாட்டு:** இயேசுவே! எனது இறுமாப்பு, கல்லான இதயம், பொறுப்பற்ற தன்மை என்னை மீண்டும், மீண்டும் பாவத்திலே விழ வைக்கின்றன. எனது மதியீனத்தை அகற்றி பிறரன்பு பேணி வாழ அருள் தாரும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## எட்டாம் நிலை

## அழுகின்ற மகளிருக்கு ஆறுதல் மொழிகள்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட எட்டடாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** தன் நிலை கண்டு மனம் பதைத்துக் கண்ணீர் மல்கி நின்ற பெண்களைத் தனது கல்வாரி நோக்கிய கடும் பயணத்தில் சந்தித்த இயேசு எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள் என்கின்றார்.

**இயேசு சொல்கின்றார்:** பெண்ணே! பொங்கி எழ வேண்டிய நீ ஏன் எனக்காக நொந்து அழுகின்றாய்? நீ அழவேண்டிய காரணங்கள் இவ்வுலகில் ஆயிரம் உண்டு.

குடும்பத்தின் குலவிளக்கு பெண் என்பதையும் மறந்து குடும்பத்தில் குழப்பத்தை விளைவித்து அதில் குளிர்காயச் சில பெண்டீர் விளைகின்றார்களே! அதை எண்ணி நீ அழு.

குடும்பத்தில் உறவு சொல்லி வந்த ஒரு பெண், மகிழ்ச்சியாக இருப்பதைப் பொறுத்துக்கொள்ள இயலாமல், அப்பெண்ணிற்கு மற்றொரு பெண்ணே எதிரியாக மாறுகின்ற அவலம் அரங்கேறுகின்றதே! அப்பெண்ணின் பெயரைக் கெடுக்க, அவரது பெயருக்கு இழுக்கு விளைவிக்க, ஒரு பெண்ணே முயலுகின்றாரே! அதை நினைத்து நீ அழு.

எத்தனையோ பெண்கள் தங்களது ஆடம்பர வாழ்விற்காகத் தங்கள் குடும்பங்களின் பொது நலனைப் புறம் தள்ளி, வருவாய்க்குமேல் செலவு செய்து, குடும்பங்களில் அமைதியைக் குழிதோண்டிப் புதைக்கின்றார்களே! அதை நினைத்து நீ அழு.

வீட்டில் உள்ள வயதான மாமனார் மாமியார்களைத் தங்களது பெற்றோர் நிலையில் வைத்துப் பார்க்காமல் அவர்களைப் பழித்துப் பேசி, அவர்களது இதயங்களைக் காயப்படுத்தி, அவர்களை வேதனைக்கு உள்ளாக்கும்

அவல நிலை நம் குடும்பங்களில் இன்றும் உள்ளதே! அதை நினைத்து நீ அழு.

தனக்கு ஒத்த துணையாக வாழும் பெண்ணைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்து தனது மகிழ்ச்சியை இழப்பதோடு, தன் குடும்பத்தில் உள்ள அனைவரின் மகிழ்ச்சியையும் தொலைக்க எத்தனையோ ஆண் மக்கள் முயலுகின்றார்களே! அதை நினைத்து நீ அழு.

தன்னைப் பெற்றவளும் பெண், தன்னுடன் பிறந்தவளும் பெண், தான் கைபிடித்தவளும் பெண் என்பதை மறந்து பெண்களை ஏளனப் பொருளாக, மோகப்பொருளாக, போதைப் பொருளாகப் பாவித்து, அவர்களின் கண்ணீருக்குக் காரணமாக எத்தனை ஆண் மக்கள் இருக்கின்றார்கள்! அதை நினைத்து நீ அழு.

**மன்றாட்டு:** இயேசுவே! குடும்பங்களில் குழப்பம் விளைவிக்கின்ற, அமைதியை குலைக்கின்ற, மகிழ்ச்சியைக் கெடுக்கின்ற இழி குணங்களை நான் விடுத்து, கிறிஸ்தவக் குடும்பங்களின் மாண்பைக் காக்கும், அமைதி பேணும் தொண்டாற்ற எனக்கு வரம் தாரும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறையாக மண்ணை முத்தமிடுகின்றார்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட ஒன்பதாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** தளர்ந்த கரங்களும் நைந்த தோள்களும் இயேசுவின் சிதைந்த உடலை மேலும் வலுவிழக்கச் செய்ய, அவரின் கால்கள் தள்ளாடித் தொடர்ந்து நடக்க மறுக்கின்றன. அவரது உடல் மீண்டும் பூமியில் புதைகின்றது. முகமெல்லாம் புழுதி படிய தன் ஆற்றலையெல்லாம் ஒன்று திரட்டி எழுந்து, மீண்டும் கல்வாரி நோக்கித் தன் பயணத்தை தொடர்கின்றார் இயேசு.

**இயேசு சொல்கின்றார்:** என் அன்பு மகனே! மகளே! உனது தீமை பயக்கின்ற சொற்களாலும் தீய பழக்கங்களாலும் பிறரைப் பாவக்குழியில் தள்ளிவிட நினைக்கின்றாயே! அவர்கள் குழியில் விழுவதற்குமுன் நீ தோண்டிய குழியில் விழும் முதல் ஆள் நீயே என்பதை மறந்து விடாதே. நீ எப்படி எல்லாம் வீழ்ந்து கிடக்கின்றாய் என்று எண்ணிப் பார்!.

மதுவுக்கும் போதைக்கும் பணத்திற்கும் புகழுக்கும் வீண்சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் அடிமையாகி நீ மயங்கிக் கீழே விழுந்து கிடக்கின்றாய் அல்லவா!

வறுமை, வெறுமை, சிறுமை, கொடுமை, அநீதி, அடக்குமுறை அனைத்தும் சேர்ந்து உன்னைக் அழுத்த நீ சோர்ந்து கீழே விழுந்து கிடக்கின்றாய் அல்லவா!

அதிகார பலம், அரசியல் பலம், பணபலம் இவற்றின் அச்சுறுத்தலுக்கு அடங்கி, ஒடுங்கி நீ வலுவிழந்து கீழே விழுந்து கிடக்கின்றாய் அல்லவா! நானும் விழுந்தேன், மூன்றுமுறை விழுந்தேன். ஆனால் விழுந்த நிலையிலே கிடக்காமல், எழுந்தேன். வீழ்ச்சி தான் எழுச்சிக்கு மூலதனம்.

தனிமை, துன்பம், துயரம், தோல்வி இவைகள் உன்னை வாழ்வின் வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும் படிக்கட்டுகள் என்பதை மறந்து விடாதே.

நீ வீழும்போது புதுவாழ்வு அடைகின்றாய், உன்னுடைய வீழ்ச்சி புது வாழ்வுக்கான, புதிய பாதைக்கான, புதிய வரலாற்றுக்கான விடியல்.

வீழ்ந்த நீயும் உன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு எழுந்து நட. உலகம் முடியும் மட்டும் நான் உன்னோடு இருக்கின்றேன்.

**மன்றாட்டு:** இயேசுவே! பாவம் புரிவதும் தீமை செய்வதும் குற்றங்கள் இழைப்பதுமான மனநிலையிலிருந்து மீண்டு, மனந்திருந்தி வாழ அருள்புரியும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## பத்தாம் நிலை

## அவமானத்தின் உச்சக்கட்டம்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட பத்தாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** ஆடைகள் உரியப்படுகின்றன. மனிதம் பறிக்கப்படுகின்றது. மனித மாண்பு சிதைக்கப்படுகின்றது. வரலாற்றினை மாற்றி எழுத வந்தவர் ஆடைகள் களையப்பட்டு அலங்கோலமாக நிற்கின்றார். “ஆடையில்லா மனிதன் அரை மனிதன்” என்னும் அவச்சொல்லுக்கு உள்ளாகி நிற்கின்றார் இயேசு.

**இயேசு பேசுகின்றார்:** என் அன்பு மகனே! மகளே! உணவில்லாமல் சில நாட்கள் இருந்து விடலாம். உறைவிடம் இல்லாமல் சாலையின் ஓரத்தில் படுத்துக் கொள்ளலாம். ஆனால் ஆடையின்றி எங்கே போவது. நீதியை விற்ற ஏரோது எனக்கு ஒரு செந்நிற அங்கியை அணிவித்தான். ஆனால் இந்த உரோமைப் போர்வீரர்கள் கூட்டம் உடம்பில் ஒன்றுமில்லாமல் எல்லாவற்றையும் உருவிக்கொண்டு, என்னை அவமானத்தின் உச்சநிலைக்கு அழைத்துச் சென்று விட்டது. நான் என்ன பாவம் செய்தேன்.

நீயும் இந்தப் போர்வீரர்களைப் போல என் ஆடைகளைப் பறித்துக் கொள்கின்றாய். எப்போது என உனக்குத் தெரியுமா?

நயவஞ்சகத்தை நீ ஆடையாக உடுத்திக்கொண்டு மற்றவர்களை உன் திரை மறைவுத் திட்டங்களுக்கு இரையாக்குகின்றாயே! அப்போது என் ஆடையை நீ பறித்துக் கொள்கின்றாய்.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை நஞ்சைத் தேக்கி வைத்துக் கொண்டு நச்சுப்புன்னகை மலர்களை அள்ளி வீசும் மனித அரளிச் செடியாக நீ வாழுகின்றாயே! அப்போது என் ஆடையை நீ பறித்துக் கொள்கின்றாய்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி, உண்மையை மறைத்துப் பொய்யை அரியணை ஏற்றி குற்றமற்றோரின் மீது வீண்பழி சுமத்துகின்றாயே! அப்போது என் ஆடையை நீ பறித்துக் கொள்கின்றாய்.

அன்று அந்தப் போர்வீரர்கள் கூட்டம் ஒருமுறைதான் என் ஆடைகளைக் களைந்தது. அதனைத் தன்னுடைய உடைமையாக்கச் சீட்டுப் போட்டது. ஆனால் ஏழை, எளியவரின் உரிமையை, மரியாதையை, மனிதாபிமானத்தை நீ பறிக்கும் போதெல்லாம், மனுக்குலத்தின் மாண்பை நீ பறிக்கும்போதெல்லாம் என் ஆடைகளையும் நீ பறித்து, அவற்றை ஏலம் போடுகின்றாய் என்பது உனக்குத் தெரியுமா?

இன்று நீ உடுத்தியிருக்கின்ற தன்னலம் என்ற ஆடையினைக் களைந்துவிடு. ஆணவம், அநியாயம், அக்கிரமம், அகந்தை என்னும் ஆடைகளைக் களைந்து விடு.

அவ்வாறு நீ களைகின்றபோது ஆடையில்லாமல் அவமானத்தில் நின்றுகொண்டிருக்கும் எனக்கு நீ ஆடை அணிவிக்கின்றாய்.

எனக்கு எப்போது நீ ஆடை அணிவிக்கப் போகின்றாய்?

**மன்றாட்டு:** இயேசுவே, எனது பாவச் செயல்களால் நீர் ஆடைகள் களையப்பட்டு அவமானத்தால் கூனிக் குறுகி நிற்கின்றீர். எனது பாவச்செயல்களைக் களைந்து அன்பென்னும் ஆடையை நான் அணிந்துகொள்ள அருள்புரியும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## பதினொன்றாம் நிலை

## சேவையின் செம்மல் சிலுவையில் அறையப்படுகின்றார்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட பதினொன்றாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** கயவர்கள் ஏவிவிட்ட கொடிய காவல் கழுகுகள் தங்களது அடுத்த கட்ட வேலையைத் தொடங்கிவிட்டன. கல்லையும் உருக வைக்கும் அந்தத் துயரக் காட்சி அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. ஊர் ஊராகச் சென்று இறையரசைப் போதித்த இறைமகனுக்குக் கிடைத்த பரிசுதான் ஆணிகள். பாவிகளை அரவணைத்து, பசித்தவருக்கு உணவளித்த நல்லவருக்கு அந்த யூதச்சமூகம் கொடுத்த பரிசுதான் ஆணிகள். முடவனை நடக்க வைத்த இவர் மூன்று ஆணிகளுக்குள் முடக்கப்படும் அவலம்!

**இயேசு பேசுகின்றார்:** நான் தூக்கி வந்த சிலுவையில் என்னைக் கிடத்தி அழகிய அல்லி மலரின் இதழ்களைக் கூறிய ஆணியால் துளைப்பது போல என்னை ஆணிகளால் அறைந்து துளைக்கின்றார்கள்.

கொட்டும் குருதி சிலுவையைக் குளிப்பாட்டுகின்றது. மூன்று ஆணிகள் என் மென்மையான உடலைத் துளைக்க நான் கதறித் துடிக்கின்றேன். நான் பூவாக வாடி, புழுவாகத் துடிக்கின்றேன்.

கூரிய ஆணிகள் என் அங்கங்களைத் துளைத்துச் சென்று, முடிவில் சிலுவை மரத்திற்கு இரத்த முத்தங்கள் அளிக்கின்றன. என் சதைகள் தைக்கப்படுகின்றன. என் கரங்களைச் சிலுவை மரத்தின்மீது வைத்து இழுத்து ஒருவன் ஆணிகளால் கொடூரமாக அறைந்தபோது, அந்தச் சம்மட்டி அடியால் என் மூளையின் நரம்புகளே அதிர்ந்து அலறுகின்றன.

வலியின் வேதனை நாக்குகள் உச்சிமுதல் உள்ளங்கால் வரை என்னைத் தொட்டுச் சுவைக்கின்றன.

என் கால்களையாவது மெதுவாக அசைக்க முடியுமா என்று பார்க்கிறேன். அப்போதுதான் ஒரு கொடியவன் அவற்றை இணைத்து என் கணுக்காலில் இரும்பு ஆணியை வைத்து ஓங்கிச் சம்மட்டியால் அடிக்கிறான். என் கூக்குரலைக் கேட்க யாரும் இல்லை. நான் தனிமரமாக நிற்கின்றேன்.

என் அன்பு மகனே! மகளே! இக்கொடுமையான காட்சியை உன்கண்முன் நிலை நிறுத்திப்பார். என்னைச் சிலுவையில் அறையும்போது நான் ஓலமிட்டுக் கத்திய கூக்குரல் உன் காதில் விழாத வண்ணம் மறைத்துக் கொண்டவை பிறருக்கு எதிராக நீ இழைத்த அநீதச் செயல்கள் அல்லவா?

ஆணிக் காயங்களால் என் சதை கிழிந்து, இரத்த நாளங்கள் வெடித்து நான் கூக்குரலிட்டபோது உன் கண்ணில் படாத வண்ணம் மறைத்துக் கொண்டவை ஒரு பாவமும் அறியாதவர் மீது நீ சுமத்திய வீண்பழிகள் அல்லவா?

இனியாவது உன் பாவச்சங்கிலியிலிருந்து உன்னை விடுவித்துக்கொள்ள எண்ணுவாயா? இதன்மூலம் என் வேதனையைத் தனிக்க முயல்வாயா?

**மன்றாட்டு:** இயேசுவே! உமது பாடுகளைக் கண்டு பரிதாபப்பட்டு, பதறுகின்ற நான் உமது அன்பை உணரத் தவறிவிட்டேன். நான் ஏற்கின்ற ஒவ்வொரு சுமையும் சந்திக்கின்ற ஒவ்வொரு துன்பமும் உம் அன்பின் அடையாளம் என உணர்ந்து வாழ அருள் தாரும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

# பனிரெண்டாம் நிலை

## இயேசுவின் உயிர் பிரிகின்றது

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட பனிரெண்டாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** விண்ணுக்கும் மண்ணுக்கும் சொந்தக்காரரான இறை மகன் இயேசு அந்தரத்தில் அனாதையாகத் தொங்குகின்ற நெஞ்சை உருக்கும் சூழல்! எப்பொழுதும் பெருங்கூட்டம் பின் தொடர வீதி வலம் வந்த இயேசு, இரண்டு இலட்சம் யூதர்கள் பாஸ்கா விழா கொண்டாட எருசலேம் நகரில் கூடிவந்துள்ள நிலையிலும் உரோமைப் படைவீரர்களின் பாதுகாப்புக் கெடுபிடியால் கலிலேயாவிலிருந்து தன்னைப் பின் தொடர்ந்து வந்த ஒரு சிலர் மட்டும் பெருந்துயரத்தில் ஆழ்ந்து, மௌன சாட்சிகளாய், கல்வாரி மேட்டின் ஒரு பக்கத்தில், சிலுவை அடியிலிருந்து கல்லெறி தூரத்தில் நின்று கொண்டிருக்க, சிலுவை மரத்தில் மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பரிதாப நிலை! இரத்தத்துளிகளால் பனித்த இயேசுவின் கண்களில் திடீரெனத் தெரிகின்றது ஒளிக்கீற்று. தூரத்தில் நின்ற ஒரு சிலரில் சிலுவையை ஏக்கத்துடன் உற்று நோக்கும் அவரது அன்னை மரியாவின் அருள் பார்வை அல்லவா அது. தன்னை உதரத்தில் அய்யிரு மாதங்கள் தாங்கிச் சுமந்த அன்னையே சாட்சியாக நிற்கத் தன் உயிர் தன் உடலை விட்டுத் தம் தந்தையிடம் செல்வதில் இயேசுவிற்குச் சற்று ஆறுதல். இப்போது மனநிறைவுடன் தன் ஆவியைத் தன் தந்தையிடம் ஒப்படைக்க இயேசு தயார்.

**இயேசு பேசுகின்றார்:** என் அன்பு மகனே! மகளே! உனக்கு உயிர்கொடுத்தவன் நான். ஆனால், நீ பிறர் உயிர் வாழ துணை நிற்பதற்குப் பதில் எத்தனை உயிர்கள் பறிக்கப்படக் காரணமாக இருந்திருக்கிறாய்!

சிலுவை மரணத்தின் மூலம் புதிய வரலாறு படைத்தவன் நான். ஆனால், நீ எத்தனை பேருடைய வரலாறுகளுக்கு முற்றுப்புள்ளிகள் பாதியிலே வைக்கப்படக் காரணமாக இருந்திருக்கிறாய்!

பலரது இலட்சியப்பயணத்திற்கு எனது சிலுவைப் பயணமே தொடக்கப்புள்ளி. ஆனால், நீ எத்தனை பேருடைய இலட்சியப்பயணங்கள் முடக்கப்படக் காரணமாக இருந்திருக்கிறாய்!

கருவில் வளர்கின்ற பெண்சிசு என்ன பாவம் செய்தது! அதற்குக் கருவிலே கல்லறை கட்ட எண்ணுகின்றாயே! அப்பொழுது நீ என்னை அல்லவா சிலுவையில் அறைந்து கொலை செய்கின்றாய்.

உனக்குப் பிடிக்காத ஒருவருடைய பெயரை நீ கெடுக்கும் எண்ணத்தில் அவரைப்பற்றி அவதூறு பேசி அவர்மீது வீண்பழி சுமத்தும்போது நீ அவரை அணுஅணுவாகச் சித்திரவதை செய்து, பச்சைக் கொலை அல்லவா செய்கின்றாய்! அவர் மனவேதனையில் புலம்பும்பொழுது நீ என்னை அல்லவா சிலுவையில் அறைந்து கொலை செய்கின்றாய்.

மனம் மாறு! நீ பழைய வாழ்வைத் துறந்து புதிய வாழ்வுக்கு அடி எடுத்து வை. பிறர் அழிய வேண்டும் என்னும் எண்ணத்தில் அவர்களுக்கு முகாரி இராகம் பாடுவதற்குப் பதில் பிறர் வாழவேண்டும் என்னும் எண்ணத்தில் அவர்களுக்கு பூபாளம் பாடு!

**மன்றாட்டு:** சிலுவையை அரியணையாக்கி, எல்லையற்ற அன்பை எண்பித்துக் காட்டிய இயேசுவே, என் இதயத்தை ஈரமுள்ளதாக்கியருளும். எனது கல்நெஞ்சத்தைக் கரையச் செய்தருளும். நான் தீயகுணங்களினின்று விடுபட்டு வாழ அருள் புரிந்தருளும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## பதிமூன்றாம் நிலை

## தாயின் மடியில் சேய்

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட பதிமூன்றாம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** குழந்தையாக இருந்தபோது தாயின் மடியில் தவழ்ந்த இயேசு இப்பொழுது சலனமற்ற, உயிரற்ற நிலையில் தன் தாயின் மடியில் துயில்கின்றார். இறையரசின் செய்தியினை ஏழை எளியவர்களுக்கு அறிவித்த அன்பாளன் உயிரற்ற நிலையில் கிடக்கின்றார். குழந்தைகளை, பிணியாளர்களைத் தொட்டுக் குணப்படுத்திய கரங்கள் துவண்டு கிடக்கின்றன. மைல் கணக்காக நடந்து சென்று நற்செய்தி அறிவித்த அவரது மலர் பாதங்கள் முடங்கிக் கிடக்கின்றன. அன்னை மரியா இந்த நிலையைக் கண்டு மீளாத்துயரில் துடிக்கின்றார், கதறுகின்றார், குமுறுகின்றார், அழுது புலம்புகின்றார்.

**அன்னை மரியா பேசுகின்றார்:** என் அன்பு மகனே! மகளே! என் உள்ளமே வெடித்துப் போவது போல் இருக்கின்றது. உலகின் உயிரான என் அன்பு மகனின் உயிரற்ற திருவுடல் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு இப்போது என் மடியில் சாய்ந்து கிடக்கின்றது. நான் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறேன்.

என் மகன் உயிரற்ற நிலையில் என் மடியில் சாய்ந்து கிடப்பதைக் கண்டு தணலில் இட்ட புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய அழுகுரல் உனக்கு கேட்கிறதா?

என் அன்புமகனின் கைகளில் கோர ஆணிகள் முத்தமிட்டதால் உண்டான ஆழமான காயம், கால்களில் இருந்த காயம் என்னைத் துன்பக்கடலில் ஆழ்த்துகின்றது.

“உன் இதயத்தை ஒரு வாள் ஊடுறுவும்” என்ற சிமியோனின் வார்த்தை என்னில் மெய்யாகிவிட்டது. இந்த நிலை இந்த உலகில் யாருக்குமே நேரிடக்கூடாது.

எந்த ஒரு தாயும் தன் குழந்தையைத் தன் மடியில் வைத்துத் தாலாட்டவே விரும்புவாள். ஆனால் என்னைப் பார். இதோ! உயிரற்ற எனது மகனின் உடலை என் மடியில் கிடத்தித் தாலாட்டும் பரிதாப நிலையில் இருக்கின்றேன்.

நான் என் செல்ல மகனை நீ நலமடைய வேண்டுமென்று உனக்காகத் தியாகம் செய்தேன். நீயும் தியாகம் செய்கின்றவனாக, செய்கின்றவளாக மாறு. மனித மனத்தினைக் காயப்படுத்துவதை நிறுத்து.

பொறுப்பில்லாமல் வாழும் வாழ்வை நிறுத்திவிட்டுப் பொறுப்புணர்வுடன் வாழ முயற்சி எடு.

**மன்றாட்டு:** அன்னையின் மடியை அரியணையாக்கி அவர் வடித்த கண்ணீரால் மனிதரின் பாவத்தைக் கழுவிய இயேசுவே! பெண்ணினத்தையும் அன்னையரையும் இழிவுபடுத்துகின்ற கொடிய செயல்களில் இருந்து நான் விலகி வாழ வரம் அருளும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.

## பதினான்காம் நிலை

## ஒரு புரட்சியாளர் புதைக்கப்படுகின்றார்.

**பாடல்:**

**வழிநடத்துபவர்:** இயேசு பாடுபட்ட பதினான்காம் நிலை

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**இறைமக்கள்:** ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்.

**வழிநடத்துபவர்:** ஒரு புரட்சியாளனை அழிக்கலாம் அல்லது புதைக்கலாம். ஆனால் அவனுடைய புரட்சிச் சிந்தனைகளை யாராலும் புதைக்க முடியாது. அவனது புரட்சிச் சிந்தனைகளின் வேகத்தை யாரும் தடுத்து நிறுத்தவும் முடியாது. தன்னை அழித்துக் கொள்வதில்தான் விதைக்குப்

பெருமை உள்ளது. தன்னை உருக்கிப் பிறருக்கு ஒளி கொடுப்பதில்தான் மெழுகுக்குச் சிறப்பு உள்ளது. இயேசுவும் தன்னை அழித்துவிட அனுமதித்தார். இதன்மூலம் புதிய வாழ்வைத் தொடங்கி வைத்தார்.

**இயேசு செல்லகின்றார்:** என் மகனே! என் மகளே! மேற்கில் மறைத்த சூரியன் மேற்கிலே முடங்கிப்போவதில்லை. மீண்டும் கிழக்கு வெளுக்கின்றது. உதயம் பிறக்கின்றது. என்னுடைய மரணம் எனது மண்ணக வாழ்விற்கு மூடு விழாவாக இருக்கலாம். ஆனால் அது புதிய விண்ணக வாழ்வின் திறப்பு விழா என்பதை மறக்க வேண்டாம்.

இதோ! நீ வாழும் சமூகத்தில் நீதியை, உண்மையைக் கல்லறைக்குள் புதைக்க முற்படும் கொடுமையைப் பார்.

நீதி, உண்மை முதலியவை ஒரு போதும் புதைப்படுவதில்லை. மாறாக, விதைக்கப்படுகின்றன.

நீ வாழும் சமூகத்தில் நேர்மையாளனை நீ குழிதோண்டிப் புதைக்க முயலுவதைவிட வேண்டடத் தகாத உன் தீயகுணங்களை ஆழக் குழிதோண்டிப் புதை. பிறரை அடக்கி வாழ விரும்புவதைப் புதை. ஒரு புரட்சியாளனை, நேர்மையாளனைப் புதைக்க நினைக்காதே.

**மன்றாட்டு:** இயேசுவே! நான் பல நேரங்களில் உண்மைக்கும் நீதிக்கும் சமாதி கட்டத் துடிக்கின்றேன். அத்தகைய செயல்களில் நான் ஈடுபடும்போது உமக்கே சமாதி கட்டுகின்றேன் என்பதை உணர்ந்து அதிலிருந்து விடுபட்டு வாழ அருள்புரியும்.

**முதல்வர்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**இறைமக்கள்:** எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே! இரக்கமாயிரும்.

**முதல்வர்:** மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக.

**இறைமக்கள்:** ஆமென்.